இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Register as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb. 1876

St. Joseph's Catholic Press, 360 Main Street Jaffna, Sri Lanka. Tel 021- 222-2378 Fax: 021-222-9041, ISSN 1391-7633

மலர் : 140
இதழ் : 04
பக்கங்கள் : 08
திகதி : 07.03.2016
விலை : 20.00



## அனைவரும் இணைந்து ஆர்வத்தோடு புதுப்பித்தல் முயற்சியில் பங்கேற்க முன்வாருங்கள்

### தவக்காலத் திருமுகத்தில் மேய்ப்புப்பணி மாநாடுபற்றிய யாழ். ஆயரின் அழைப்பு

யாழ். ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் தனது மறை மாவட்ட மக்களுக்கு எழுதியுள்ள தவக்காலச்சுற்றுமடலில் எதிர் வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெற ஏற்பாடாகியுள்ள மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாட்டில் எமது மறைமாவட்டத்தைச் சேர்ந்த குருக்கள், இங்கு பணியாற்றும் துறவற சபையினர், மற்றும் பொது நிலை விசுவாசிகள் ஆகிய அனைவரும் இணைந்து ஆர்வத்தோடு செயலாற்றி இந்த புதுப்பித்தல் முயற்சி பலனளிக்க உழைக்க முன்வர வேண்டும் என்று கேட்டுள்ளார். (ஆயரின் தவக்காலத் திருமடலை 2ம் பக்கத்தில் காணலாம்)

### மேய்ப்புப்பணி மாநாட்டிற்கான ஆயத்த விழிப்புணர்வு கருத்தரங்குகள்

மேற்படி மாநாட்டிற்கான ஆயத்தப்பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், இதன் முதல் நிகழ்வாக யாழ். மறைமாவட்டக் குருக்களுக்கான ஆயத்த விழிப்புணர்வுக் கருத் தரங்கு இம்மாதம் 14ம் திகதியும், துறவறத்தார், பொதுநிலையினரின் பிரதிநிதிகள் ஆகியோருக் கான கருத்தரங்குகள் முறையே இம்மாதம் 19ம், 22ம் திகதிகளிலும் ஆயர் இல்லத்தில் நடைபெற விருக்கின்றன.

## யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் ஆங்கிலத்தில் ஞாயிறு திருப்பலி

மார்ச் மாதம் 6ம் திகதியிலிருந்து ஒவ்வொரு ஞாயிறு தினமும் பகல் 11.30 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் ஆங்கிலத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுகின்றது.

## யாழ். புதுமை மாதா ஆலயத்தில் பகல் திருப்பலிகள்

இதேவேளை, ஒவ்வொரு புதன், வெள்ளி ஆகிய நாட்களில் யாழ். புதுமை மாதா ஆலயத்தில் பகல் 12 மணிக்குத் தமிழ் திருப்பலிகளும் ஒப்புக்கொடுக்கப்படுகின்றன.

## 'உலகம் தோன்றுவதற்கு முன்பே அன்பு'

### குழந்தைகளுக்கான திருத்தந்தையின் நூல்

உலகின் அனைத்துக் குழந் தைகளையும் வத்திக்கானுக்கு வரவழைத்து அவர்களோடு பேச விரும்புகிறேன் ஆனால், அது முடியாது என்பதால், இந்நூலின் வழியே அவர்கள் அனைவரோடும் பேச விழைகிறேன் என்று திருத் தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் பெயரால் வெளியான ஒரு நூலைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

உலகின் 26 நாடுகளைச் சேர்ந்த குழந்தைகள் 14 மொழிகளில் எழுதித்தந்த 259 கேள்வி களில், 31 கேள்விகளுக்கு திருத்தந்தை

(8ம் பக்கம் பார்க்க...)

## யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில் சிறப்பாக இடம்பெற்ற வீரமாமுனிவர் நினைவு விழா



யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த பெப்ரவரி 19ஆம் திகதி மதியம் 2.45 மணிக்கு வீரமாமுனிவர் நினைவு விழா இடம்பெற்றது. யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியின் அதிபரும் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவருமான அருட் திரு. ஜெறோ செல்வநாயகம் அடிகளார் இந்நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார். மன்னார் மறைமாவட்டத்தின் கலையருவி அமைப்பின் இயக்குனரும் மன்னார் தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் தலைவருமாகிய அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் "வீரமாமுனிவரும் எழுத்துச் சீர்திருத்தமும்" என்ற தலைப்பில் பல்லூடகக் காணொளியை (Power Point Presentation) பயன்படுத்தி சிறப்புரையாற்றினார்.

சிறப்புரையைத் தொடர்ந்து "தமிழ் மொழியில் ஆற்றல் பெறுவதற்குப் பெரிதும் துணை செய்வது எழுத்துப் பயிற்சியா? கேள்விப் பயிற்சியா? வாசிப்புப் பயிற்சியா?" என்ற பொருளில் மாணவர்களின் சொல்லாடுகளம் நிகழ்வு இடம்பெற்றது. மாண வர்கள் மூன்று அணியினராகப் பிரிந்து இந்த நிகழ்வில் பங்கேற் றனர். கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் பிரதி அதிபரும், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் பொருளாளருமான திரு. ச. லலீசன் அவர்கள் இந்தச் சொல்லாடுகளம் நிகழ்வுக்கு நடுவராகப் பணியாற் றினார். புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் திரு. இ. வசீகரன் நன்றியுரை நிகழ்த்தினார்.

(8ம் பக்கம் பார்க்க...)

## "இறைவனின் இரக்கம் எமது திருத்தந்தை வழியாக எமக்குக் கிடைத்த பாக்கியம்"

### யாழ் மறை மாவட்ட யூபிலி யாத்திரை நிகழ்வில் யாழ் குருமுதல்வர்



எம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்ட இரக்கத்தின் யூபிலி ஆண்டின் பரிபூரண பலனை இறைமக்கள் அனைவரும் பெற்று மீட்படையும் நோக்கில், யாழ் மறைமாவட்ட ரீதியாக முதன்முதலில் ஒழுங் கமைக்கப்பட்ட தூய கதவினூடான யாத்திரை திருவழிபாடானது 22.02.2016 அன்று யாழ். மரியன்னை பேராலயத்தில் காலை 8.30 – மதியம் 1.00 மணி வரை சிறப்பாக இடம் பெற்றது. இத்திருவழி பாட்டில் உன்னதமாக அமைந்த திருப்பலியில் திருவுரை ஆற்றும் போதே யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை கலாநிதி P.J.ஜெபரட்ணம் அடிகள் மேற் கண்டவாறு எடுத்துரைத்தார்.

மேலும் அவர் தமது திருவுரை யில் குறிப்பிடுகையில், தூய பேதுருவானவரின் தலைமைத்துவ திருநாளை நினைவுகூரும் இந்நாளில் யாழ். மறைமாவட்ட இறைமக்களாகிய நாமும் இறை இரக்கத்தால் இணைவு பெற்று ஒரே குடும்பமாக ஒன்று கூடியுள்ளோம். இது எமக்கொரு பாக்கியமான நாளாகும். அன்று பேதுருவிடம், நீங்கள் நான் யார் எனச் சொல்கின் றீர்கள்? எனக் கேட்ட வேளையில் பேதுரு "நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்" என்று கூறிய வேளையில் தான் முதல் திருத் தந்தையாகிய தூய பேதுருவுக்கு இயேசுவும் திருச்சபையை முழுமை யாக நெறிப்படுத்தும் அதிகாரத்தை

(8ம் பக்கம் பார்க்க...)

## இரக்கத்தின் யூபிலி ஆண்டில் மரணதண்டனைகளை இரத்து செய்யுங்கள்

### குற்றவாளிகளும் வாழ்வதற்குரிய உரிமையைக்கொண்டுள்ளனர் திருத்தந்தை அறைகூவல்

உலகில் மரண தண்டனைகள் நிறைவேற்றப்படுவதை இரத்து செய்வதற்கு மட்டுமன்றி, சிறை களின் நிலைமைகளை மேம்படுத் தவும் முயற்சிகள் எடுப்பது, கைதி களின் மனித மாண்பை மதிப்பதாக இருக்கும் என்று திருத்தந்தை கூறினார்.

உரோம் சான் எஜிதியோ கத்தோலிக்க பக்த அமைப்பு, "மரண தண்டனை இல்லாத உலகம்" என்ற தலைப்பில், ஓர் அனைத்துலக கருத்தரங்கைக் குறித்து குறிப்பிட்டத் திருத்தந்தை,

மரண தண்டனையை இரத்து செய்வதற்கு ஒருமித்த தீர்மானங் களை எடுக்குமாறு, நாடுகளின்

(8ம் பக்கம் பார்க்க...)

## ஆயர் வரவேற்பும் தூய சதாசகாய அன்னை ஆலய திறப்பு விழாவும்

கடந்த 17.01.2016 அன்று மல்லாகம் பதியில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தூய சதாசகாய அன்னை ஆலயம் புதிய ஆயர் மேதகு யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

குளம்ங்கால், மல்லாகம், சுன்னாகம், சபாபதிப்பிள்ளை வீதி, சூராவத்தை, ஏழாலை ஆலயப் பங்கைச் சேர்ந்தவர்களும், ஏனைய அன்னையின் பக்தர்களும் இணைந்து ஆயர் அவர்களை வரவேற்ற நிகழ்வு சிறப்பம்சமாக அமைந்தது. அந்த அந்தப் பங்கு மக்களால் வரும் பாதையில் குறிப் பிட்ட ஆலயங்களின் அமைவிடப் பிரதேசங்களில் ஆயர் அவர்கள் ஆரத்தி எடுத்து, மாலை அணிவிக் கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

(8ம் பக்கம் பார்க்க...)

## ஏமது ஏண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும்

# புதிதாய் வாழ்வோம்!

யாழ்ப்பாண மறைமாவட்டத்தைப் புதிதாகப் பொறுப்பெடுத்திருக்கும் எமது ஆயர் அவர்கள் ஒரு முக்கியமான விடயத்தை அறிவித்திருக்கின்றார். வருகிற ஆகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கின்ற மேய்ப்புப்பணி மாநாடு பற்றிய அறிவித்தலே அதுவாகும். ஆயர் தனது தவக்காலத் திருமுகத்திலும் இவ்விடயத்தை வலியுறுத்தியிருக்கின்றார். யாழ். திருச்சபை எத்திசையில் பயணிக்கவேண்டும் என்பதை தீர்மானிக்கவும் அதனை செயற்படுத்தவும் ஒரு ஐந்தாண்டு கால புதுப்பித்தல் திட்டத்தை உருவாக்குவதே இம்மாநாட்டின் நோக்கம் எனறு கூறி அதற்காக எல்லாருடைய ஒத்துழைப்பையும் ஆயர் கேட்டுநிற்கின்றார்.

மேய்ப்புப் பணி மாநாடு என்றவுடன் பலர், புதிதாக என்ன வரப்போகிறது? எப்படியான முடிவுகளை எடுக்கப்போகிறார்கள்? என்ற கேள்விகளைக் கேட்பவர்களாகவும், அவற்றிற்கான பதில்களுக்காக காத்திருப்பவர்களாகவும், சுருக்கமாக சொல்லப்போனால் பங்காளிகளாக இல்லாமல் பார்வையாளர்களாக இருக்க விரும்புகின்றவர்களாகவும் இருப்பார்கள். இது எங்களுடைய அலுவலல்ல என்று ஏற்கனவே தீர்மானித்துவிட்டவர்கள் பலர் இருப்போம். ஆயர் தனது திருமடலில் ஊர் கூடித் தேர் இழுப்பதுபோல என்று குறிப்பிடும் அழகான உவமானத்தை நாம் கவனிக்கவேண்டும். எல்லாரும் இது தங்களுடைய செயற்பாடு என்பதை மறக்காமல் திருச்சபையில் தாம் அழைக்கப்பட்டுள்ள நிலைக்கேற்ப தமது முழுமையான பங்களிப்பை வழங்க முன்வர வேண்டியது இம் மாநாட்டின் வெற்றிக்கு இன்றியமையாததாகும்.

அத்துடன், இம்மாநாட்டிற்கான ஆயத்த காலம் சொற்பமாக இருப்பதால் எல்லாரும் விரைவாக, ஆனால், நிதானமாக செயற்பட வேண்டியவர்களாயிருக்கின்றோம். விரைவில் நடாத்தப்படவுள்ள விழிப்புணர்வு நிகழ்வுகள், கருத்தரங்குகள், கருத்துக் கணிப்புகள் போன்றவற்றில் அனைவருடையவும் ஈடுபாட்டோடு கூடிய பங்களிப்பு அவசியமாகின்றது.

எமது மறைமாவட்டம் தற்போது எப்படியான நிலையில் இருக்கின்றது என்பதை முதலில் கண்டுகொள்வதும், நாம் அடையவேண்டிய இலக்கு என்ன என்பதை அடையாளம் காண்பதும் அவ் இலக்கை அடைய நாம் செய்யவேண்டியவை எவை என்பதை தேர்ந்து தெளிந்து படிப்படியாக அவற்றை நிறைவேற்றி இலக்கை எட்டுவதுமே இம்மாநாட்டின் முக்கிய செயற்பாடுகளாக அமையும்.

இவை எல்லாவற்றையும் செய்வதற்கு முதலில் எமக்குத் தேவையானது தூய ஆவியானவரின் வழிநடாத்துதலேயாகும். எனவே, மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாட்டின் மூலமாக தூய ஆவியார் எமது மறைமாவட்டத்தில் எவ்வாறு செயற்பட விரும்புகிறாரோ அந்த வழிகளில் எம் எல்லாரையும் அவர் வழிநடாத்தும்படியாக சிறப்பாகச் செபிப்பது எம் எல்லாருடையவும் தலையாய கடமையாகும். எமது மறைமாவட்டத்தின் பாதுகாவலியாகிய பரிசுத்த கன்னிமரியாவும், புனித சூசையப்பரும், சகல புனிதர்களும், சகல சம்மனசுகளும் எங்களுக்காக பரிந்துரை செய்வார்களாக!

**ஆசிரியர்**

**பாதுகாவலன் அடுத்த இதழ் ஈஸ்டர் சிறப்பிதழாக 20.03.2016 அன்று வெளி வரும்.**
**உங்கள் ஆக்கங்களை 15.03.2016 இற்கு முன் அனுப்பி வையுங்கள்.**

**ஆசிரியர்.**

# இறை இரக்கத்தாலும் திரு ஆட்சிப் பீடத்தின் பணிப்பினாலும் யாழ் மறைமாவட்ட ஆயரான ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆகிய நாம்

**குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய இறைமக்களுக்கு விடுக்கும் தவக்கால சுற்றுமடல்.**

**கிறிஸ்துவில் அன்பார்ந்த இறைமக்களே!**

தவக்காலம் என்பது ஒரு கிறிஸ்தவனின் வாழ்வில் ஒவ்வொரு வருடமும் வரும் மிக முக்கிய காலமாகும். வேகமாக நகரும் எமது வாழ்வை ஒருமுறை நின்று நிதானித்து சீர்தூக்கிப் பார்க்க கிடைக்கும் ஒரு அருளின் காலமாகும். எம்முள்ளே சென்று எம்மை நாமே ஆராய்ந்து எமது உணர்வுகளை, மனப்பாங்குகளை, உறவுகளை சீரமைத்துக் கொள்ளும் மனமாற்றத்தின் காலமாகும். அதிலும் குறிப்பாக திருத்தந்தை கூறுவதுபோல் "இந்த இரக்கத்தின் யூபிலி ஆண்டில் வரும் தவக்காலம் இறைவனின் இரக்கத்தை விசேட விதமாக கொண்டாடுவதற்கு மிகவும் வாய்ப்பான காலமாகும்" (ஆஏ.17)

**இறைமனித உறவு:**
**ஒரு இரக்கத்தின் வரலாறு**

இறைவிருப்புக்கு கீழ்ப்படிய மறுத்து மனிதன் பாவம் செய்த போதும் இறைவன் மனிதனை கைவிட்டுவிடவில்லை. மாறாக படைப்பின் மறைபொருளை விட பலமடங்கு உயர்வான மீட்புத் திட்டத்தை மனிதனுக்கென ஏற்படுத்துகிறார். இந்த இரக்கத்தின் செயல்முறையால்தான் இறைவன் இஸ்ராயேல் மக்களோடு உடன்படிக்கை ஒன்றைச் செய்கிறார். அந்த அன்பின் உடன்படிக்கையை ஒருதலைப்பட்சமாக முறித்து அவர்கள் பாவத்தில் வீழ்ந்த பொழுதெல்லாம் தனது ஆழ்ந்த இரக்கத்தின் விளைவாக உடன்படிக்கைக்கு பிரமாணிக்கமாக இருக்கும் இறைவன் மீண்டும் மீண்டும் அவர்களை அரவணைத்துக் கொள்கிறார். இறைவாக்கினர் ஒசேக்கும் பிரமாணிக்கமில்லா அவரது மனைவிக்கும் இடையிலான உறவு இஸ்ராயேல் மக்களுக்கும் இறைவனுக்குமுள்ள உறவின் தன்மையை விளக்க திரு விவிலியத்தில் உதாரணமாக பயன்படுத்தப்படுகின்றது. பிரமாணிக்கமின்றி பிரிந்து செல்லும் மனைவி ஒவ்வொரு முறையும் திரும்பிவரும்போது ஓசே இறைவாக்கினர் அவரை ஏற்றுக் கொள்வது போலவே இஸ்ராயேல் மக்களையும் இறைவன் இரக்கத்தோடு அரவணைக்கிறார். கீழ்ப்படியாமையால் பாவத்தில் விழும் மனுக்குலத்தின் மீது இறைவன் காட்டும் நிபந்தனையற்ற அன்பையும் இரக்கத்தையும் இது வெளிப்படுத்துகிறது. இந்த அன்பின் வரலாறு இயேசுக்கிறிஸ்துவின் மனிதாவதாரத்திலே உச்சமடைகிறது. திருத்தந்தை தமது தவக்கால மடலிலே குறிப்பிடுவது போல "சிலுவையில் அறையுண்ட இயேசுவின் மூலம் கடவுள் பாவிகளை நெருங்கிவர எவ்வளவு விரும்புகிறார் என்பது புலனாகிறது" எனவே தான் இரக்கத்தின் யூபிலி ஆண்டில் வரும் இந்த தவக்காலத்தை இறைவனின் இரக்கத்தை உச்சமாக அனுபவிக்கவும் அந்த இரக்கத்தை மற்றவரோடு பகிர்ந்து கொள்ளவும் நாம் பயன்படுத்த வேண்டும்.

ஆகவே ஆழமான மனமாற்றத்திற்கூடாகச் சென்று ஒப்புரவு அருள் அடையாளத்தை பொருளுள்ள வகையில் பெற்றுக் கொண்டு இறைவனின் இரக்கத்தை சுவைப்பதும், இரக்கத்தின் செயல்களில் ஈடுபட்டு இரக்கமுள்ள எமது வானகத் தந்தையைப்போல நாமும் இரக்கமுள்ளவர்களாக மாறுவதும் மிக அவசியமாகும்.

**தொலைந்த ஆடுகளைத்தேடி**

தொலைந்துபோன ஒரு ஆட்டைக்கூட அன்போடு தேடி இரக்கத்தோடு மீட்டெடுக்கும் நல்லாயனாக இயேசு தம்மை வெளிப்படுத்தியுள்ளார். இன்று எமது சமூகத்திலே பலர் இவ்வாறு தொலைந்து போனவர்களாக சமூகத்தின் விளிம்புக்குத் தள்ளப்பட்டவர்களாக உள்ளார்கள். போராலும் இயற்கை அனர்த்தங்களாலும் நீடித்த உடல் உள பாதிப்புக்கு உள்ளானவர்கள், சாதிய ரீதியாக ஒடுக்கப்படுபவர்கள், வன்முறைக்கும் துஷ்பிரயோகத்துக்கும் ஆளாகும் பெண்கள், சிறுவர்கள், போர் முடிந்து ஏழு ஆண்டுகளின் பின்பும் இடப்பெயர்வு அவலத்துக் குள் வாழ்வோர், சிறையில் வாடுவோர், காணாமல் போன உறவுகளைத்தேடி அலைவோர் போன்ற பலதரப்பினர் எமது இரக்கத்தின் தொடுகைக்காகக் காத்திருக்கின்றனர்.

பல்வேறு காரணங்களுக்காக எமது திருச்சபையிலிருந்து பிரிந்து சென்றிருப்பவர்கள் இக்காலத்தில் எமது கரிசனையை விசேட விதமாக பெறவேண்டும். குருக்களும் துறவிகளும் தொலைந்து போன இந்த ஆடுகளை தேடிச் சென்று அரவணைக்க வேண்டும் எனப் பணிக்கும் அதேவேளையில் பொதுநிலை நம்பிக்கையாளர்களையும் உங்களது அன்பான அணுகுமுறை, சாட்சிய வாழ்வு என்பவற்றின் மூலம் அவர்களை மீண்டும் எமது தாய் திருச்சபைக்கு அழைத்துவர முயற்சிக்க வேண்டும்என வேண்டுகோள் விடுக்கிறோம். ஒவ்வொரு ஆலயத்திருச்சபையும் இதில் மிகுந்த கவனமெடுத்து உங்களது எல்லைக்குள் இவ்வாறு விலகிச்சென்றிருப்பவர் மட்டிலும் பல்வேறு மனத்தாங் கல்களால் திருச்சபை செயற்பாடு களிலிருந்து ஒதுங்கி இருப்பவர் மட்டிலும் சிறப்புச் செயற்றிட்டங்களை முன்னெடுக்க வேண்டு மென கோரி நிற்கிறோம்.

**மறைமாவட்ட**
**மேய்ப்புப்பணி மாநாடு**

நாம் யாழ் மறைமாவட்டத்தை புதிதாக பொறுப்பெடுத்திருக்கும் நிலையில் எதிர்காலத்தில் யாழ் திருச்சபை எத்திசைகளில் பயணிக்கவேண்டும் என்பதை தீர்மானிக்கவும் அதனை செயல்படுத்தவும் ஒரு ஐந்தாண்டு கால புதுப்பித்தல் திட்டம் ஒன்றை உருவாக்க விரும்புகிறோம். உங்கள் அனைவரது கருத்துக்களையும் உள்வாங்கி ஒரு மேய்ப்புப்பணி மாநாட்டை நடாத்துவதன் மூலம் முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டிய விடயங்களைத் தீர்மானித்து நடைமுறைப்படுத்த விரும்புகிறோம். வருகின்ற ஆவணிமாத இறுதியில் நடைபெற இருக்கிற இம்மாநாட்டுக்கான ஆயத்த வேலைகள் இப்போதே ஆரம்பிக்கப் பட்டுள்ளன. இம்முன்னெடுப்பு இறைவிருப்புக்கு அமைவான பயனுறு செயற்பாடாக அமைய வேண்டுமென தொடர்ச்சியாக இறைவனை வேண்டுமாறு கோருகிறோம். மேலும் ஊர் கூடித் தேரிழுப்பது போல அனைவரும் இணைந்து ஆர்வத்தோடு இந்த புதுப்பித்தல் முயற்சியில் பங்கேற்க முன்வருமாறும் அழைப்பு விடுக்கின்றோம்.

**இத்தவக்காலத்தில்**
**முன்னெடுக்ககூடிய சில**
**நடைமுறை ஆலோசனைகள்.**

- தினமும் இறைவார்த்தையில் ஒரு பகுதியை வாசித்து தியானித்தல்.
- தினமும் ஒரு இரக்கத்தின் செயலைச் செய்தல்.
- இரக்கத்தின் செயல்களில் ஈடுபட பிள்ளைகளைத் தூண்டுதல்
- குடும்பமாக ஒரு இரக்கச் செயலில் ஈடுபடல்
- ஆழமான மனமாற்றத்தின் வெளிப்பாடாக நல்லதொரு ஒப்புரவு. அருள்அடையாளத்தைப் பெற்றுக் கொள்ளல்.
- சிலுவைப்பாதைச் சிந்தனைகளை இரக்கத்தினை மையப்படுத்தியதாகத் தயாரிதது்ச் சிந்தித்தல்.
- குடும்பமாக தவக்கால யாத்திரையில் ஈடுபடல்.
- ஆலயத்திருச்சபையாகத் திட்டமிட்டு இரக்கச்செயல் எதிலும் ஈடுபடல்.
- திருச்சபையிலிருந்து ஒதுங்கியிருக்கும் அல்லது பிரிந்து சென்ற ஒருவரையாவது சந்தித்து மீள இணைக்க முயலுதல்.

"அவர் இருந்தது போல நாமும் அவரோடு ஒன்றித்து இருந்தோமானால், அவர் உயர்ந்தெழுந்தது போலவே நாமும் அவரோடு ஒன்றித்து உயிர்த்தெழுவோம்" (உரோ.06:5). ஆகவே அன்புக்குரியவர்களே! இந்த தவக்காலத்தில் மனமாற்றமடைந்து நாமும் எமது பழைய பாவ இயல்புக்கு கிறிஸ்துவோடு இறந்து அவரோடு புதுமனிதர்களாக உயிர்த்தெழ முன்வருவோம். இத்தவக்காலம் எம் அனைவருக்கும் இப் புத்துயிர்ப்பு அனுபவத்தைத் தரட்டும்.

"இரசம் தீர்ந்துவிட்டது" என்று திருமண வீட்டார் மீது பொங்கிய இரக்கத்தோடு இயேசுவிடம் பரிந்துரைத்த மரியா இரக்கத்தின் அன்னையாக எமக்கு அருகிருந்து வழிநடத்துகிறார். அவளது பரிந்துரை வழியாக நாம் ஒவ்வொருவரும் இந்த தவக் காலத்தை மனமாற்றத்துக்குரிய ஒரு அரிய சந்தர்ப்பமாக பயன் படுத்துவோமாக.

எமது மறைமாவட்டத்தின் பாதுகாவலியும், நாம் இறைவனின் இரக்கத்தை அனுபவிக்க எமக்கு எப்போதும் துணையாக இருப்பவருமாகிய தூய கன்னிமரியாவின் பரிந்துரையும் வழிநடத்தலும் உங்கள் அனைவருக்கும் கிடைப்பதாக.

**ஆண்டவரில் உங்கள்மேல் பற்றுள்ள**
**பேரருட்திரு ஜஸ்ரின்**
**ஞானப்பிரகாசம்**
**யாழ்.மறைமாவட்ட ஆயர்.**
**ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்**
**06.03.2016**

*இச்சுற்றுமடலை ஒரு ஞாயிறு தினத்தில் வாசித்து விளக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்.*


# விண்ணக வாழ்வின் 31ம் நாள் நினைவு



அமரர் செலஸ்தீனுப்பிள்ளை
மேரி திரேசா (குணசீலியம்மா)

**மண்ணில்: 09.10.1932**
**விண்ணில்: 08.02.2016**

**நான் உமது கூடாரத்தில் எந்நேரமும் தங்கியிருப்பேன் உமது இறக்கையின் பாதுகாப்பில் தஞ்சம் புகுவேன். [திருப்பாடல்]**

அன்னாரின் ஆன்மா இறைவனில் அமைதி பெற
09.03.2016 புதன்கிழமை காலை 7.15 மணிக்கு
மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயத்தில்
இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.
இதில் கலந்துகொண்டு செபிக்க அன்போடு
அழைக்கின்றோம்.

5ம் வட்டாரம்
மண்டைதீவு.

Advt- 17/16

இவரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

# அன்னை மரியாள் இரக்கத்தின் தாய்



## முன்னுரை

இரக்கத்தின் யூபிலி ஆண்டானது இறைவன் எமக்கு உவந்தளித்த சிறப்பான கொடையாகும். இறைவனின் இரக்கத்தை நாம் அளந்து பார்க்க முடியாது. காரணம் அவர் இரக்கத்தின் ஊற்றாக இருக்கின்றார். அவருடைய பிள்ளைகளாகிய நாம் அவரது இரக்கத்தை நன்கு சுவைக்கவும், அதை எமது அயலவருடன் பகிரவும் மீண்டும் ஒரு அழைப்பு இவ்வாண்டில் தரப்படுகின்றது. எனவே இச்சிறப்பான காலத்தில் எம் எல்லோருக்கும் அன்னையாக விளங்கும் மரியாள் எவ்வாறு இரக்கத்தின் அன்னையாகத் திகழ்கின்றார் என்பது பற்றிச் சிந்திப்பது சாலவும் பொருத்தமான ஒன்றாகும்.

## இரக்கத்தின் அன்னை

எமது மூதாதையர் காலம் தொட்டு நாம் அன்றாடம் செபிக்கும் செபம், "மிகவும் இரக்கமுள்ள தாயே" என்பதாகும். இச் செபத்திலே அன்னை மரியாளை இரக்கத்தின் தாயாக விழித்து நாம் செபித்துவருகிறோம். இதன் வழியாக எம்மையும், மனுக்குலம் முழுவதையும் மரியாளின் இரக்கத்திற்குள் ஒப்புக்கொடுத்து வேண்டுகிறோம். சுவீடன் நாட்டு புனித பிறியிட் (St. Brigid of Sweden) என்பவருக்கு அன்னை மரியா கூறிய வார்த்தைகள், "நானே பரலோக அரசியும், இரக்கத்தின் தாயுமாயிருக்கிறேன்; நானே நீதிமான்களின் மகிழ்ச்சி, என் வழியாகவே பாவிகள் இறைவனிடம் கொண்டுவரப்படுகின்றார்கள்" என்று கூறித்தன்னை இரக்கத்தின் தாயாக மரியாள் வெளிப்படுத்துவதை நாம் காணலாம். குவாட்டலுபே (Guedalupe) என்னும் இடத்தில் புனித யுவான் டிகோ (St.Juan Diego) என்பவருக்கு காட்சிகொடுத்து மரியாள் கூறிய வார்த்தைகள்: "நான் உன்னோடு இல்லையா? நான் உன்னுடைய தாய் இல்லையா? நீ என்னுடைய நிழலிலும் பாதுகாப்பிலும் இல்லையா? உனது மகிழ்ச்சியின் ஊற்று நான் அல்லவா? நீ என்னுடைய கரங்களுக்குள்ளும், எனது பரிவிரக்கத்தின் குடைக் குள்ளும் இல்லையா? இதைவிட உனக்கு வேறு என்ன வேண்டும்? இவ்வாறு கூறி தனது இரக்கத்தின் பராமரிப்பை மரியா வெளிப் படுத்தினார்".

**அருட்தந்தை தே.யூட்தாஸ்**

## அன்னை மரியாவை இரக்கத்தின் அன்னையாக கீழ்வரும் மூன்று நிலைகளில் நோக்கலாம்!

1. அமல உற்பவம்

மரியாவின் அமல உற்பவத்தின் மூலம் இறைவன் அன்னை அவர்களை தன்னுடைய இரக்கத்தின் உருவமாக வடிவமைத்தார். பல இறையியலாளர்கள் "முன்னரே கிடைக்கும் அருள்" (Prevenient grace) பற்றிப் பேசுவார்கள். அதாவது நாம் கேட்காமலேயே. அந்த அருளுக்கு நாம் தகுதியில்லாத நிலையில் இருக்கும் பொழுது கூட, இறைவன் தாமாக முன்வந்து கொடுக்கும் அருளே இவ்வருளாகும். ஒரு குடும்பத்தில் பெற்றோர் பிள்ளைகளை அன்பு செய்கிறார்கள்.குழந்தைகள் பெற்றோரின் அன்பை கேட்காமலேயே பெற்றோர் தாமாக முன்வந்து பிள்ளைகளை அன்பு செய்கிறார்கள். எதற்காக என்றால் அக்குழந்தை தங்களுடைய குழந்தை என்ற ஒரே காரணத்தினாலே ஆகும். இவ்வாறுதான் அமல உற்பவம் என்கின்ற கொடையும் இறைவன் தானாக முன்வந்து தனது பேரிரக்கத்தின் நிமித்தம் மரியாளுக்குக் கொடுத்த சிறப்பான கொடையாகும். தனது மகனுக்காக மரியாவுக்கு இக் கொடையைக் கொடுத்தார்.

தொடரும் ...

# சுகமான கூடுகளை விட்டு நாம் வெளியேற வேண்டும்!

அனலும் 4 கனலும்

இன்றைய உலகம் ஒரு அவசரமான உலகம் என்பதை யாரும் மறுக்கமுடியாது. விஞ்ஞான வளர்ச்சியும், தொழில்நுட்ப முன்னேற்றங்களும் எம்மை எங்கேயோ கொண்டு போய்விட்டன. எதையுமே விரைவாக, இலகுவாக பெறவேண்டும் என்ற எதிர்பார்ப்பு எல்லோரிடமும் இன்று உள்ளது. விரைவு உணவைப் போன்று (Fast food) எல்லாமே எதுவித தியாகம் இல்லாமல் நடந்தேற வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாக உள்ளது. இத்தகைய ஒரு சமூகச் சூழலில் திருத்தந்தையின் 'சுகமான கூடுகளை விட்டு வெளியேறி உங்களை அர்ப்பணியுங்கள்' என்ற அறைகூவல் காலத்திற்கு பொருத்தமானது. நாங்கள் எங்களுக்கென்றே அமைத்துக்கொண்ட பாதுகாப்பு அரண்களை, வேலிகளை, தடைகளைத் தகர்த்தெறித்து இந்த இரக்கத்தின் ஆண்டில் சமூகத்தின் விளிம்பில் வாழ்வோரை தேடிச் செல்வது காலத்தின் கட்டாயமாகும்.

### இயேசுவின் பணிவாழ்வு தெருவில்

இயேசுவின் பகிரங்கப்பணிவாழ்வு முழுவதுமே ஒரு பாதுகாப்பற்ற, திறந்த, தெருவில் வாழ்ந்த வாழ்வாகவே அமைந்தது என்பதை நற்செய்தி தெளிவாகக் கூறுகின்றது. எந்தவொரு அமைப்புக்குள்ளும் தன்னை முடக்கிக் கொள்ள அவர் விரும்பவில்லை. தெருத்தெருவாக பயணித்தே இறைவார்த்தையை, நற்செய்தியை அறிவித்து இறையரசை நிலைநாட்டும் நகர்வுகளை முன்னெடுத்தார். இயேசு தங்குவதற்கென்றோ, இளைப்பாறுவதற்கென்றோ எந்தவொரு இடமும் இருந்ததாக நற்செய்தி குறிப்பிடவில்லை அவர் தெருவிலே வாழ்ந்த மனிதன். எவரையும் தெருவிலேயே சந்தித்து அரவணைத்து, ஆறுதலளித்து வாழ்வுகொடுத்த மனிதராகவே வாழ்ந்து வந்தார். எனவேதான் பறவைகளுக்கு கூடுகளுண்டு நரிகளுக்கு வளைகளுண்டு மனுமகனுக்கோ சாய்க்க இடமில்லை என்றார். இயேசு சுகம் தேடி, சுகமான கூடுகளுக்குள் அடைக்கலம் தேடுபவராக வாழவில்லை. எப்போதுமே எவரும் அணுகக்கூடிய விதத்திலே (Availability) வாழ்ந்தார் என்பது கண்கூடு. இதனால்தான்'இடுக்கமான வாயில் வழியே நுழைய பாடுபடுங்கள்' என்று அறை கூவல் விடுத்தார். இசேுவின் போதனையும், வாழ்க்கையும் முரன்பட்டதாக, வெய்யிலிலும், மழையிலும், வசந்தத்திலும், வனாந்தரத்திலும், வறுமையிலும், உண்மையிலும் வாழ்ந்த வாழ்க்கையாகவே அமைந்தது. தேவைப்பட்ட நேரங்களில், விரும்பிய இடத்தில் ஓய்வெடுத்தார். சுகமான கூடுகளை என்றுமே நாடிச்சென்றதில்லை. இத்தகைய இயேசுவின் மனநிலையில்தான் திருச்சபையும், பணியாளர்களும், இறைமக்களும் வாழ வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார் திருத்தந்தை.

**அருட்பணி ஸ்ரனி அன்ரனி அமதி**

எல்லோருடனும் எல்லைகளைக் கடந்த (Crossing the Borders) உறவை வளர்த்துக் கொண்டார். எல்லாக்காலத்திற்கும் உரித்தான மனிதக்கடவுளாக (Man of all neasons) மாற்றிக்கொண்டார். இன்றைய நவீனத்துவத்தின் சுகமான கூடுகளை விட்டு வெளியேறி இயேசுவின் மனநிலையில் இறை இரக்க ஆண்டில் சமுதாயத்தின் விளிம்பில் உள்ளோரை தேடிச்சென்று இயேசுவின் சாட்சிகளாக உதவுவதே இன்றை சவாலாக உள்ளது.

### சமகாலச் சுகமான கூடுகளைத் தகர்ப்போமா!

இறை இரக்க ஆண்டிலே நாம் ஆன்மீக, உடல் சார்ந்த இரக்கச் செயல்களைச் செய்வதற்கு சுகமான கூடுகளை விட்டு வெளியேறுதல் இன்றியமையாதது. நாம் உண்மை கிறிஸ்தவர்களாக வாழ்வதற்கு இயேசுவின் மனநிலைதான் அடிப்படையாக அமைகின்றது. இன்று எமது சமூகங்களில், பங்குகளில், அமைப்புக்களில் மனிதனைவிட சட்டங்களுக்கு, பாரம்பரியங்களுக்கே முதன்மை அளிக்கப்படுகின்றது. இன்றும் எமது சமூகங்களில் நிலவும் வர்க்க, சாதிய, பாகுபாடுகள், வேறுபாடுகள், சுயநலச் சிறைகள்தான் இன்று எமது சுகமான கூடுகளாக மாறிவிட்டன. கிறிஸ்தவத்தைப் பொறுத்தமட்டில் வாழ்வைத் தொடாத மதமாகவே வாழப்பட்டு வருகின்றது. அடுத்திருப்பவர்மட்டில் அக்கறையில்லாத (Indifference) நிலை இன்றைய பின் நவீனத்துவத்தின் அடிமைத்தனமாகவும் கருதப்படலாம். நான், எனது மகிழ்ச்சி, எனது குடும்பம் என்ற வட்டங்களை, சுகமான கூடுகளை அமைத்து வாழும்போது எப்படி நாம் துன்புறுவோரை, ஏழைகளை, சமுதாயத்தில் முகவரி இல்லாதோரை தேடிச் செல்ல முடியும், பெரும்பாலும் எங்களைப்பற்றியும், எங்கள் தேவைகளைப்பற்றியும் சிந்திக்கும்போது நம் அடுத்திருப்பவர்களை தேடிச்செல்ல முடியாது. ஒரு அரைவேக்காடான கிறிஸ்தவத்தையே வாழ்ந்துவருகின்றோம். திருச்சபையும் அமைப்புக்களையும், ஒழுங்குகளையும் சட்டங்களையும் நிலைநிறுத்தி அமைப்பு ரீதியாக தன்னைப் பலப்படுத்துவதில்தான் முனைப்புக் காட்டுகின்றது. திருத்தந்தையோ திருச்சபையை சுகமான கூடுகளை உடைத்துத் தெருவிற்குக் கொண்டு வரவே முயன்று வருகின்றார். இறைவனின் இரக்கம் எல்லோரையும் தேடிச்செல்வதற்கு சுகமான வேலிகளுக்குள், மதில்களுக்குள், கட்டடங்களுக்குள் முடங்கிவாழும் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டியது இறை இரக்க ஆண்டில் முதன்மையானதாகும். சுய இன்பத் தேடலே இன்றைய நவீனத்துவத்தின் மையப்புள்ளியாக மாறிவிட்டது என்பதில் இரு கருத்து இருக்க முடியாது.

### ஈடுபாட்டுடன் கூடிய ஆன்மீகமே தேவை

இன்று சமூதாயத்தின் விளிம்பில் வாழ்வோர் எமது சமூகங்களில் பங்கில் நிறையப்பேர் உண்டு. இவர்கள் மட்டில் எங்கள் கண்ணோட்டம் என்ன? ஆலயங்களுக்கு மட்டும் சென்று மதக்கடமைகள் நிறைவேற்றுவதுதான் ஆன்மீகமா? இலகுவான, சொகுசான ஆன்மீக மாயைக்குள் சிக்கிவிட்டோம்! நோவு, வலி, துன்பம் இல்லாத முறையில் எமது ஆன்மீகத்தை நாமே அமைத்துக் கொண்டோம். இத்தகைய சுகமான கூடுகளுக்குள் பாதுகாப்பாக வாழும் ஆன்மீகம் செயலற்ற விசுவாச வாழ்விற்கே ஒப்பானது. நாம் இறைவனில் வைத்திருக்கும் நம்பிக்கை கோட்பாடுகளுக்குள்ளும், ஆராதனைகளுக்குள்ளும், மதக்கடமைகளுக்குள்ளும் முடக்கப்படுமாயிருந்தால் நாம் அடுத்திருப்பவரைப் பற்றி சிந்திக்க முடியாது. புதிய கதவுக்குள் நுழைந்து இறைவனின் ஆசீரையும், பரிபூரண பலன்களையும் பெறும் நாம் ஏழைகளின், துன்புறுவோரின், கைவிடப்பட்டோரின், வீட்டுக்கதவுகளுக்குள்ளும் நுழைய வேண்டும்; அவர்களோடு உறவாடி உதவவேண்டும். எங்கள் வறட்டுக் கௌரவங்களை ஒதுக்கி வைத்துவிட்டு இயேசுவின் மனநிலையில் செயற்படும் போதுதான் ஆன்மீகம் ஈடுபாட்டுடன் கூடிய செயலுக்கு தூண்டுகின்றது. அதைவிடுத்து எமது சுயநல சிறைகளுக்குள் சுகமாக வாழ்ந்து கொண்டு கிறிஸ்தவத்தை வாழ்வாக்க முடியாது. கல்வாரித் தலங்களை இறைவனின் இரக்கத்தைப் பெற தேடும் நாங்கள் எம் மத்தியில் கல்வாரிச் சிலுவையை சுமந்து வாழும் ஏழைகளின், கைவிடப்பட்டோரை தரிசித்து உதவும் மனநிலையில் செயற்பட முனைப்பு காட்டுவதுதான் கடவுள் விரும்பும் உண்மையான நோன்பாகும். நாம் சமூக ஈடுபாட்டுடன், சமுதாயத்தின் விளிம்பில் உள்ளவர்களின் வாழ்வில் அக்கறையோடு நல்லாயன் இயேசுவைப் போன்று தேடிச் சென்று இறைவனின் இரக்கத்தை நாம் அவர்களுக்கு உணர்த்தும் கருவிகளாக மாறவேண்டும்! இதுதான் சிலுவையின் வழியில் வாழும் சீடத்துவம் என்பதை உணருவோமா! உணர்ந்தால் எமக்கு வாழ்வு உண்டு.

# கல்வாரிப் பலியில் முழுமையாகப் பங்குபற்ற

இன்று இயேசுவின் வார்த்தை "நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ள வில்லை நான் தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன்" உலகில் எத்திசையில் வாழ்ந்துகொண்டிருக்கும் எண்ண முடியாத மக்களிலிருந்து இயேசு எம்மை தம் உரிமையின் மக்களாய் தெரிவு செய்துள்ளார். இயேசுவுக்காக நாம் வாழ வேண்டும். தபச் செயல்களான ஒறுத்தல் முயற்சிகளையும், சிலுவைப்பாதைகள், திருமணி ஆராதனைகளை முழுமன தோடு செய்யவேண்டும். இவைகள் யாவையும் கொடிய மனமுள்ள பாவிகளின் மனமாற்றத்துக்காகவும், உலகத்தில் இறை கட்டளைக்கெதிராய் நடந்து கொண்டிருக்கும் பாவங்களுக்குப் பரிகாரமாகவும் இறைதந்தைக்கு ஒப்புக் கொடுக்க முன்வரவேண்டும். இதைவிட புனித பவுல் தனது திருமுகத்தில் உரோமை யருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கிறிஸ்தவ வாழ்வு, கிறிஸ்தவ வாழ்க்கைக்குரிய ஒழுங்குகள் பற்றி உரோ. 12:1-2; 6-21 வரை எழுதப்பட்டுள்ளது. இதில் எழுதப் பட்டிருப்பது போல் முழுமையை செய்வது கடினமானது எம்மால் செய்யக் கூடியது எதுவென்றார். பவுலடியார் கூறுகிறார்.

i. கடவுளுக்கு உகந்த தூய உயிருள்ள பலியாக உங்களைப் படையுங்கள். இதுவே நீங்கள் செய்யும் உள்ளார்ந்த வழிபாடு.

ii. உங்கள் அன்பு கலங்கமற்றதாய் இருக்கவேண்டும்.

iii. எல்லோருக்கும் அன்பு காட்டுங்கள்.

iv. பிறரையும் இறைவனின் பிள்ளை கள் என மதியுங்கள்.

v. துன்பம் வந்தபோதும், துயரில் ஆழ்ந்த போதும், இன்பத்திலும் இறை வனுக்கு நன்றி கூறுங்கள்.

vi. இறைவேண்டலில் நிலைத் திருங்கள்.

vii. உங்களைத் துன்புறுத்துவோருக் காகச் செபியுங்கள்.

உங்கள் செபங்கள் அவர்களை மனமாறவைக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக இறைவா என்னையும் உம்மைப் போல் எல்லோரையும் நேசிக்க, அன்பு செய்ய வேண்டிய அருளைத் தரும்படி கேட்கவேண்டும். கேட்பதினால் தான் பெற்றுக் கொள்கிறோம்.

இவை எல்லாவற்றையும் நாம் செய்யும்போதும் அதன் வழிநடக்க முயலும் போதும் இயேசு எம்மோடு உரையாடுவார். எம்மனதில் நல்ல எண்ணங்களை கோதுமை மணிகள் என விதைப்பார். களைகள் அழிந்துவிடும். சிலுவைப்பாதை செய்ய முடியாவிட்டாலும் அவருடைய திருப்பாடுகளை நினைக்கும் போதும், வாசிக்கும் போதும் கல்வாரிப்பலியில் முழுமையாக பங்குபற்ற முடியும்.

R. மேரி மக்டலின்

## பாடுகளின் பாதையிலே பரம சுதனின் ஊர்வலம்

**1**



பிலாத்துவின்
அரண்
மனையது
குற்றவாளிக்
கூண்டில் ஒரு
நிரபராதி
பெயர் யேசு
விடுவிக்க வழி
தேடிய பிலாத்து தோற்றுப்
போனான் மக்களிடம்
பட்டம் பதவி நட்பு மக்களின்
கூக்குரல் அவன் மனதை
மாற்றியது.

**2**



பாவம்
படையினர்
கூலிக்கு
வேலை
செய்பவர்கள்
ஏற்றினர்
சிலுவையை
அது அவர்கள் தொழில்
அது அவர்கள் தொழில்
யேசுவின் தோளில்
பாவத்தின் சுமை பயணத்தை
தொடர்ந்தார் கல்வாரி மலைக்கு

**3**



பாவத்தின்
பாரம்
பரமனை
அழுத்தவே
தட்டுத்
தடுமாறினார்
தடுக்கியே
வீழ்ந்து விட்டார்
தூக்கிட எவருமில்லை
பலம் கொண்டு எழுந்து
மீண்டும் பயணம்
தொடர்ந்தார்

**4**



பயணம்
தொடர்கை
யில்
பார்த்திட்டார்
அன்னையை
பரிதவித்து
விட்டனர்
இருவரும்
பகிர்ந்து கொண்டனர்
பார்வையால் கவலையை

**5**



யேசுவின்
மேனி
சோர்ந்து
வீழ்ந்தது
பிடித்தனர்
சீமோனை
சிலுவையைச்
சுமக்க
பயத்தினால் சீமோனும்
பாரத்தை ஏற்றான்

**6**



தூசியும்
இரத்தமும்
வியர்வையும்
சேர்ந்து
பார்ப்போர்
வியக்கும்
பயங்கரத்
தோற்றம்
பார்த்த பாவையொருத்தி
பயமின்றிச் சென்று
துடைத்தே விட்டாள்
யேசுவின் முகத்தை

**7**



படையினர்
தாக்குதல்
யேசுவை
பாடாய்
படுத்த
வீழ்ந்து
விட்டார்
மறுபடியும்
எழுவதற்கு எத்தனித்து
எழுந்தே நடந்தார்

**8**



எங்கிருந்தோ
வந்தது ஒரு
கும்பல்
பெண்கள்
கூட்டம்
உதவிக்கல்ல
உணர்வு
களைப்
பரிமாற யேசுவின் பார்வை
அவர்களைக் கண்டதும்
எனக்காக அழாதீர்
என ஆறுதல் கூறினார்

**9**



பசியும்
தாகமும்
நெடுந்தூரப்
பயணமும்
ஒருங்கே
சேர்ந்து
அவரை
வருத்த
நிதானம் இழந்தவர்
நிலம் நோக்கிச்சரிந்தார்
கொடுத்து வைத்த நிலமது
ஏற்றுக் கொண்டது
அவரது வீழ்ச்சியை

**10**



இப்படியொரு
அவமானம்
எவருக்குமே
நடக்கக்
கூடாதென
எண்ணுமள
விற்கு
உடலின்
துணிகள் அகற்றப்பட்டார்
அகற்றப்பட்ட ஆடைகளை
படையினர் பகிர்ந்து கொண்டனர்
உடையின் மீது சீட்டுப்போட்டு
அதையும் உரிமை
ஆக்கிக் கொண்டனர்

**11**



இத்துடன்
நிறுத்தினால்
எத்துணை
நிம்பதி
அத்தனை
சக்தியும்
கொண்டு
அறைந்தனர்
சிலுவையில்
துடித்துப் போனார்
வெடித்தன கைகள்
புழுவாய் நெழிந்தார்

இமெல்டா தோமஸ்
சாவகச்சேரி

**12**




தந்தையின்
விருப்பம்
இதுவென
உணர்ந்தவர்
தொங்கினார்
சிலுவையில் இல்லை இல்லை
தொங்கவிடப்பட்டார்
மண்ணுக்கும் விண்ணுக்கும் நடுவே
நன்மைக்கும் தீமைக்கும் இடையே
தொங்கினார் வேதனை விளிம்பின்
தொங்கிய யேசு வேதனையுடனே
பரமனை நோக்கி
ஏன் என்னைக் கைவிட்டீர்
என்று கூக்குரல் எழுப்பி
எல்லாம் நிறைவேறிற்று
என்று தலை சாய்ந்து
ஆவியை ஒப்படைத்தார்
ஆனந்தம் அவர் முகத்தில்

# இயேசுவின் பாடுகளில் வார்த்தைகள் ஏழு

### சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த இயேசுவை நோக்கி சொல்லப்பட்ட வார்த்தைகள் ஏழு

01. "கோவிலை இடித்து மூன்று நாளில் கட்டி எழுப்புகிறவனே உன்னை விடுவித்துக்கொள். நீ இறைமகன் என்றால் சிலுவையிலிருந்து இறங்கிவா" (மத். 27:39-40)
02. "நீ மெசியா தானே! உன்னையும் எங்களையும் காப்பாற்று" குற்றவாளிகளுள் ஒருவன். (லூக் 23-29)
03. இயேசுவே. நீர் ஆட்சி உரிமை பெற்று வரும் போது என்னை நினைவிற்கொள்ளும்" குற்றவாளிகளில் மற்றவன் (லூக் 23:42)
04. பிறரை விடுவித்தான், தன்னையே விடுவிக்க இயலவில்லை. இவன் இஸ்ரயேலுக்கு அரசனாம்! இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கிவரட்டும் அப்பொழுது இவனை நாங்கள் நம்புவோம். கடவுளிடம் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தானாம்! அவர் விரும்பினால் இப்போது இவனை விடுவிக்கட்டும். "நான் இறைமகன்" என்றானே! என்றார்கள் தலைமைக் குருக்கள். மறைநூல் அறிஞர்கள் மற்றும் மூப்பர்கள். (மத். 27: 42-43)
05. " இதோ! இவன் எலியாவைக் கூப்பிடுகிறான்". "பொறுங்கள். எலியா இவனைக் கீழே இறக்க வருவாரா பார்ப்போம்" என்றனர் சூழ நின்று கொண்டிருந்தவர்கள். (மாற். 15:36)
06. "நீ யூதர்களின் அரசனானால் உன்னைக் காப்பாற்றிக்கொள்" என்று படைவீரர் எள்ளி நகையாடினர். (லூக் 23:36-37)
07. "இம் மனிதர் உண்மையாகவே இறைமகன்" என்றார் நூற்றுவர் தலைவர். (மாற் 15:39)



### சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்தபோது இயேசு பேசிய வார்த்தைகள் ஏழு

01. "தந்தையே இவர்களை மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை" (லூக் 23:34)
02. "நீ இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன்" (லூக் 23:43).
03. "என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்?" (மத் 27:46).
04. "அம்மா இவரே உம் மகன்" "இவரே உம் தாய்" (யோவான் 19:26-27).
05. "தாகமாய் இருக்கிறது" (யோவான் 19:28)
06. "எல்லாம் நிறைவேறிற்று" (யோவான் 19:30)
07. "தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கின்றேன்" (லூக் 23:46).

### அன்னை மரியாவின் துயரங்கள் (வியாகுலங்கள்) ஏழு

01. சிமியோன் இறைவாக்கு. (லூக். 2:34-35)
02. எகிப்துக்கு தப்பி ஓடிச் செல்லுதல். (மத் 2:13-21)
03. காணாமல் போன சிறுவன் இயேசுவைக் கண்டுபிடித்தல். (லூக் 2:41-50)
04. இயேசு சிலுவை சுமந்து கல்வாரிக்குச் சென்றது. (யோவான் 19:17)
05. இயேசு சிலுவையில் அறையப்பட்டு உயிர்விட்டது. (யோவான் 19:18-30)
06. இயேசுவின் திருவுடலை சிலுவையினின்று இறக்கியது. (யோவான் 19:39-40)
07. இயேசுவின் திருவுடலைக் கல்லறையில் அடக்கம் செய்தது. (யோவான் 19: 41-42)

**க.மரியநாயகம்**

---

## உண்மையாச் சொல்வது உண்மைதானா?

'ஒருத்தருக்குமில்ல
உங்களுக்குத்தான் இந்தவிலை!'
என்கிறான் கடைக்காரன்;
'கடனாகத்தான்
கடவுளாண கட்டாயம் நாளை!'
என்கிறான் கடன்காரன்;
இவர்கள்
உண்மை சொல்வதாகச் சொல்வது
உண்மையில் உண்மைதானா?

உண்மையில் பகலிரவாய்
பாடுபட்டுழைத்தேன்!'
என்கிறார் ஆசிரியர்;
'பைபிளாண படிப்பிச்சது சரியில்ல
அதனால பாஸ்வரயில்ல!'
என்கிறான் மாணவன்;
இவர்கள்
உண்மை சொல்வதாகச் சொல்வது
உண்மையில் உண்மைதானா?

'சத்தியமாய் இலாபத்தில்
ஒருபகுதி உனக்கு!'
என்கிறான் முதலாளி;
'தலைமீதாணை
நாணயமாய் நடப்பேன்!'
என்கிறான் தொழிலாளி;
இவர்கள்
உண்மை சொல்வதாகச் சொல்வது
உண்மையில் உண்மைதானா?


'உன்னாண உனக்காகத்தான்
நான் உயிர்வாழ்கிறேன்!'
என்கிறான் காதலன்;
'என்னாண, நான் உயிர்வாழ்வதே
உனக்காகத்தான்!'
என்கிறாள் காதலி;
இவர்கள்
உண்மை சொல்வதாகச் சொல்வது
உண்மையில் உண்மைதானா?

'பசிகிடந்து பரமனாணை 10நாளாயிற்று
ஒரு 10ரூபாய்!'
வேண்டுகிறான் ஏழை;
'இருப்பில் இல்லை
இருந்தால் இறைவணாண இழப்பேன்!'
சொல்கிறான் செல்வன்;
இவர்கள்
உண்மை சொல்வதாகச் சொல்வது
உண்மையில் உண்மைதானா?

**செ.அன்புராசா அடிகள்,**
**மாங்குளம்.**

## கவிதைச் சரங்கள்

### கோபம்




கோபம் என்பது மனிதருக்கு
வரவேண்டிய உணர்வுகள்
அதிலும் கோபமே
புத்தியின் அழிவுத் தன்மை
கோபம் வந்துவிட்டால்
என்ன செய்வதென்று தெரியாது
திடீர் முடிவுகள் பல
அதிலும் தனித்து விட்டால்
இவற்றிற்கு இப்படியா?
எம்மை நாமே நினைத்துப் பார்க்கும் - போது
வெட்கம் தன்னை அறியாமலே வரும்
தலையாய பாவங்களில் கோபமும் - ஒன்றாகும்
யேசுவின் வாழ்க்கையிலும்
கோபம் வந்ததுண்டு - காரணம்
அவரின் இயல்புக்கு அற்றதாக
மக்கள் ஜெருசலேம் தேவாலயத்தில்
விற்பனை செய்ததனால் கோபம்
மனிதனுக்கு விரக்தி ஏற்பட்டது
அதன் மையப் பொருள் - புனித ஆலயம்
அதை தீட்டுப்படுத்தியதே!

**யஸ்ரின் யாகப்பர் மேரி மெசிடெஸ்**
**இரணைமாதா நகர், பூநகரி.**

# ஆயர் பணியின் நிகழ்வுகளின் பதிவுகள்

படங்கள் சுதர்சன்

10.01.2016 புதிய ஆயரை இளவாலைப் பங்குச் சமூகம் வரவேற்கையில்



17.01.2016 மல்லாகம் சதா சகாய அன்னை ஆலயம் திறந்து வைத்தலின் போது.



19.01.2016 இந்திய துணைத்தூதரகத்தில் துணை தூதுவருடனான சந்திப்பில்



20.01.2016 அன்னை திரேசா சபை மாகாணத் தலைவியின் விஜயம்



23.01.2016 துறவற சபை பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல்



26.01.2016 செபமாலை தாசர் சபை ஸ்தாபகரின் விண்ணகப் பிறப்பின் 52வது ஆண்டு நிறைவில் .



29.01.2016 மன்னார் மறைமாவட்ட ஸ்தாபகத்தின் 30வது ஆண்டு நிறைவு நன்றிப்பலியில்.



30.01.2016 ஐநா சபை பிரதி நிதிகளின் விஜயத்தின் போது.



03.02.2016 கிளிமுல்லை மறைக்கோட்ட தரிசிப்பின் போது



05.02.2016 தூய யாகப்பர் ஆலயத்தில் ஆவியை அளிக்கையில்



06.02.2016 தெகிவளை மாதா ஆலய மாலை வழிபாட்டில் ஆயரின் ஆசீர்.



07.02.2016 புனித ஹென்றி அரசர் பழைய மாணவர் கொழும்பு கிளையினர் ஆயரை வரவேற்கையில்




17.02.2016 தூய அந்தோனியார் கலலூரி தன் மைந்தனை நினைக்கையில்







## 31வது நாள் நினைவஞ்சலி

மண்ணில் 23 . 09 . 1927



விண்ணில் 02 . 02 . 2016

அமரர்

### தியோகுப்பிள்ளை மரியதாஸ்

மரியன்னையின் பக்தனாய்
மரியதாசன் என நாமம் பூண்டு
மங்கள இல்லறத்தில் மனைவி,
பிள்ளைகளை மகிழ்வுடன் வாழ வைத்தீர்
இன் சொல் பேச்சும்
இறைவன் மீது பற்றும்
தளரா உள்ளமும், தன்நம்பிக்கையும்
உன் வாழ்வை வளமாக்கிட
வாழ்ந்தீர் - முற்றிலும் பிறருக்காய்.
இறைவனடி இளைப்பாற இறைஞ்சுகின்றோம்.
எந்நாளும் செபிக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மனைவி - பெர்ணதேத் மரியதாஸ்,
பிள்ளைகள் - மரியதாஸ் ஜெகதாசன், மரியதாஸ் யோகதாசன்
மரியதாஸ் அமலதாசன், ஜசிந்தா அமலதேவி,
மரியதாஸ் பிரேமதாசன், ஜசிந்தா விமலதேவி,
மற்றும் மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

உயரப்புலம்
ஆனைக்கோட்டை

Advt - 18/16

## விண்ணகப் பிறப்பில்

### 1ம் ஆண்டு நினைவு தினம்

மண்ணில் 24 - 09 - 1956



விண்ணில் 13 - 03 - 2015

### திருமதி யோண் கொன்றாட் மேரி ஆன் [பவளம்]

"இறப்பு என்பது முடிவல்ல
விண்ணக வாழ்வின் ஆரம்பம்"
என்றும் வாழும் தந்தாய் இவ்வுலக வாழ்வை முடித்துக் கொண்டு
எம்மை விட்டு பிரிந்து சென்று ஓராண்டு காலமானாலும்
இவரது நினைவுகள் என்றும் எம்முடன் வாழ்கின்றன
இவருக்கு நித்திய இளைப்பாற்றியை அளித்து
உமது புனிதர்களின் கூட்டத்தில் சேர்த்துக் கொள்ளுமாறு
பிரார்த்திக்கின்றோம். ஆமேன்.

குருநகர்
யாழ்ப்பாணம்.

AD - 16/16

இவரின் பிரிவால் துயருறும்:
யோண் கொன்றாட் (குட்டி -கணவன்)
பியோ, நொய்லின்(பிள்ளைகள்).

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 05 . 04 . 1926



இறப்பு 26 . 03 . 2013

### அமரர் P.N மரியநாயகம்

எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உமது
நினைவுகள் எமது மனதை விட்டு
அகல்வதில்லை.

அன்புடன் நினைவுகூரும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,

## 5th Year Death Anniversary



Departed 27.02.2011 | Born 09.07.1937

**"For we believe that Jesus died and rose again and so we believe that God will bring with Jesus those who have fallen asleep in Him." (1Thes.4:14)**

*Late Mr. S. Soosaipillai Pakiyanathan Athanas*

*Dad...*
*We won't immortalize you in the stars, because they fade away.*
*We won't remember you with a poem, for it will be forgotten one day.*
*We will just keep you safe in our heart, so that you are with us in every way. We miss you. May His Soul Rest In Peace.*

With Love
Wife, Children, Son in Law and Grand children.

Advt - 22/16

## விண்ணக வாழ்வின்

ஒன்பதாண்டு நிறைவு | எட்டாண்டு நிறைவு



திரு. அந்தோனிப்பிள்ளை
அலெக்ஸ்
(ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்)
மண்ணில் 17.07.1935
விண்ணில் 09.03.2007



திருமதி. அலெக்ஸ்
பிலோமினா
மண்ணில் 23.09.1938
விண்ணில் 03.10.2008

"நான் மண்ணிலிருந்து உயர்த்தப்படும் போது
அனைவரையும் என்பால்
ஈர்த்துக்கொள்வேன்"
யோவான்.12:32]

18, புதுமை மாதா கோவில்,
கிழக்கு வீதி,
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்

## PAATHUKAVALAN

Register as Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb.1876

## நிலை வாழ்வினில் 31ம் நாள்

மண்ணில் 29 . 05 . 1933



விண்ணில் 13 . 02 . 2016

### அமரர் இராயப்பு பெர்னாண்டோ

[தம்பிநாயகம் - மூப்பர் - மண்டைதீவு]

"ஆண்டவரிடம் அச்சம் கொள்வோரது முடிவு
மகிழ்ச்சிக்கு உரியதாய் அமையும்: அவர்கள்
இறக்கும் நாளில் ஆசிபெறுவார்கள்" [சீராக் 1:13]

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 12.03.2016
சனிக்கிழமை மு.ப 10.30 மணிக்கு மண்டைதீவு புனித
பேதுருவானவர் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி
ஒப்புக்கொடுக்கப்படும்.

மார்க்கம், ரொறன்ரோ,
கனடா,
இலங்கையில்
5ம் வட்டாரம்
மண்டைதீவு.

Advt - 20/16

பிரிவால் துயருறும்
மனைவி- மேரி லூர்து நாயகி (மாணிக்கம்),
மகன்மார்- டயஸ், கயஸ், சுரேஸ், நிரேஷ்,
அமலநாயகம், மகள்-டெனீசியா, குடும்பங்கள்

# குழந்தைகளின் கேள்விகளுக்குத் திருத்தந்தை பதில்

**இவ்வுலகில் இன்றும் புதுமைகள் நடக்கின்றனவா?**
**இவ்வுலகைப் படைப்பதற்கு முன், இறைவன் என்ன செய்துகொண்டிருந்தார்?**
**செபிப்பதற்கென்று உங்களுக்கு விருப்பமான இடம் ஒன்று உள்ளதா?**
**உங்கள் வாழ்வில் இன்னும் நீங்கள் செய்ய விழைவது என்ன?**

துன்புறும் குழந்தைகளைக் காணும்போது தன் மனம் மிகவும் வேதனையுறுகிறது என்றும், புதுமைகள் ஆற்றும் திறன் தனக்கு இருந்தால், உலகில் உள்ள அனைத்துக் குழந்தைகளையும் குணமாக்குவேன் என்றும் திருத்தந்தை கூறிய பதில், ஒரு நூல் வடிவில் இவ்வியாழனன்று வெளியாகியுள்ளது.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் உலகின் பல நாடுகளிலிருந்து குழந்தைகள் கேட்டிருக்கும் கேள்விகளுக்குப் பதில் அளித்ததைத் தொகுத்து, 'உலகம் தோன்றுவதற்கு முன்பே அன்பு" என்ற தலைப்பில் நூல் ஒன்று வெளியாகியுள்ளது.

குழந்தைகள் கேட்டிருக்கும் கேள்விகளுக்கு பதில் அளிப்பது அவ்வளவு எளிதல்ல என்று கூறிய திருத்தந்தை, 'இவ்வுலகில் இன்றும் புதுமைகள் நடக்கின்றனவா?' என்று ஒரு சிறுவன் எழுப்பியக் கேள்விக்குப் பதில் அளிக்கும் போது, தங்கள் துன்பங்களின் நடுவே, இறைவன் மீது கொண்டிருக்கும் நம்பிக்கையை இழக்காமல் மக்கள் வாழ்வது, தன்னைப் பொறுத்தவரை ஒரு பெரும் புதுமை என்று பதில் அளித்துள்ளார்.

கனடா நாட்டைச் சேர்ந்த ஒரு சிறுவன், இவ்வுலகைப் படைப்பதற்கு முன், இறைவன் என்ன செய்துகொண்டிருந்தார் என்று எழுப்பியக் கேள்விக்கு, இவ்வுலகைப் படைப்பதற்கு முன்பே, இறைவன் அன்பு கொண்டிருந்தார், அன்பாக வாழ்ந்தார் என்று திருத்தந்தை பதில் அளித்துள்ளார்.

செபிப்பதற்கென்று திருத்தந்தைக்கு விருப்பப்பட்ட இடம் ஒன்று உள்ளதா என்று சிறுமி ஜோசப்பின் எழுப்பியக் கேள்விக்குப் பதில் அளிக்கும்போது, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இறைவனை எங்கும் காணமுடியும், அவர் நம் உள்ளத்தைக் காண்கிறவர் என்பதால், எவ்விடத்திலும் செபிக்க முடியும், பல் மருத்துவரிடம் செல்லும் போதும் தன்னால் செபிக்க முடியும் என்று பதில் சொன்னார்.

இவ்வகையில், சிறுவர், சிறுமியர் எழுப்பிய பல்வேறு கேள்விகளுக்குப் பதில் அளித்துள்ள திருத்தந்தை, உங்கள் வாழ்வில் இன்னும் நீங்கள் செய்யவிழைவது என்ன என்று போலந்து நாட்டின் இரு சிறுவர்கள் எழுப்பியக் கேள்விக்கு இறுதியாகப் பதில் அளிக்கும்போது, நான் தொடர்ந்து புன்சிரிப்புடன் வாழ விரும்புகிறேன், கடவுளைப் பார்த்து புன்சிரிப்புடன் வாழ ஆசைப்படுகிறேன், துன்புறுவோருக்கு உதவிகள் செய்ய ஆசைப்படுகிறேன் என்று கூறி, இந்நூலில் தன் பதில்களை நிறைவு செய்துள்ளார்.

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 23 . 11 . 1935



உதிர்வு 15 . 03 . 2014

### அருளானந்தம் திரேசம்மா

"ஆண்டவரது அன்பர்களின் சாவு அவரது பார்வையில் மிகவும் மதிப்புக்குரியது" (திருப்பாடல் 116:15)

அன்பின் இறைவா,
எங்கள் அன்புத் தெய்வம் எம் அம்மாவுக்காக நன்றி கூறுகின்றோம்.
எம்மை உயிரிலும் மேலாக நேசித்து, தம் உதிரம் சிந்தி எம்மை உருவாக்கி,
எம்மோடு வாழ்ந்த எம் அன்பு அம்மாவை கனிவோடு கண்ணோக்கியருளும்.
அவரை நித்திய பேரின்ப வீட்டில் நித்தியமும்
பாதுகாத்துக்கொள்ள தாழ்மையோடு மன்றாடுகின்றோம்.
கன்னிமரியே... மாசில்லாமல் உற்பவித்த இறைவனின் தாயே...
திருச்செபமாலையை அளவில்லாத அன்புடன் தினமும் செபித்து,
எம்மையும் செபிக்கத் தூண்டிய எம் பாசமிகு அம்மாவை
உமது பாதத்தில் ஒப்படைத்துள்ளோம்.
அவருக்காக உமது திருமகனிடம் வேண்டிக்கொள்ளும்.
இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக யாழ். சுண்டிக்குளி தூய திருமுழுக்கு
யோவான் ஆலயத்தில், வைத்தியசாலைவீதி, காலை 06.00 மணிக்கு
(15.03.2016 செவ்வாய்க்கிழமை) திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

36/2 Temple Road
Jaffna.

என்றும் பாசமறவாத,
கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்

## முதலாம் பக்க தொடர்ச்சி ...

களாகவும் விளங்க வேண்டும் என குருமுதல்வர் தனது திருவுரையில் வேண்டுகோள் விடுத்து அதனை நிறைவு செய்தார்.

யாழ் மறைமாவட்ட ரீதியாக இடம்பெற்ற இவ்வுன்னத திருவழிபாட்டில் பெரும் தொகையான இறைமக்கள் யாத்திரையாக வருகை தந்து, பாவசங்கீர்த்தனம் செய்து குணமாக்கல் வழிபாட்டிலும், திருப்பலியிலும் முழுமையாக பங்கேற்றதுடன் இறுதியாக யாழ் ஆயரினால் மேற்கொள்ளப்பட்ட நற்கருணை ஆசீர்வாதத்திலும் பங்கேற்று புத்துணர்வுடன் மக்கள் சென்றமை உண்மையில் அர்த்தம் நிறைந்த திருவழிபாடாகவும், மறைமாவட்ட ரீதியான புதுப்பித்தல் நிகழ்விற்கு மக்கள் செவி சாய்த்து பரிபூரண பலனைப் பெறுவதில் ஆர்வம் காட்டியமையும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாக அமைந்ததில் ஐயமில்லை.

**தகவல்:**
**S.M. வுளோறன்ஸ்,**
**(இளவாலை)**

### ஆயர் வரவேற்பும்...

ஆண்டகையை மனமகிழ்வுடன் வரவேற்கும் வாசகங்கள் அடங்கிய பதாதைகள் ஆங்காங்கே கட்டப்பட்டு அலங்கரித்தன.

மல்லாகம் சந்தியில் இருந்து நட்டுவ, நாதஸ்வர மங்கல வாத்தியங்கள் சகிதம், ஆயர் அவர்களை வரவேற்கும் பவனி கோலாகலமாக இடம் பெற்றது. புதிய ஆயருக்கான இவ்வரவேற்பு நிகழ்வு அனைவரின் உள்ளங்களிலும் இறையழைத்தலை ஊக்குவிப்பதாய் அமைந்தது.

முதலில் ஆலய வளாகத்தின் முகப்பில் அமைந்துள்ள குருசு மரம் ஆசீர்வதிக்கப்பட்டது. புதிய ஆலயத்தின் நாடாவை ஆயர் அவர்கள் வெட்டித் திறந்து உள்ளே பீடம், நற்கருணைப் பேழை ஆகியவற்றை அபிஷேகம் செய்த பின், அன்னையின் பக்தர்கள் அனைவரும் 'ஆலயத்திற்குள் அலை மோதிச் சென்ற காட்சி உள்ளத்தைத் தொட்டது எனலாம். "சதாசகாய தாயே சதா துணை நீரே உன் பாதம் தேடும் மைந்தர்க்கு ஆதாரம் நீ தாயே.." என்று ஒவ்வொரு உள்ளங்களும் மௌனமாக ஆர்ப்பரித்தன.

திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அவர் தமது மறையுரையில் "இறை இரக்கத்தின் யூபிலி ஆண்டில் ஒரு புதிய ஆலயத்தை திறந்து வைப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். கடின உழைப்பின்பேரில் இவ்வாலயம் உருப்பெற்றுள்ளது. எது எங்களுக்கு நல்லதோ, அது அந்த நேரங்களில் நிறைவேறும். நம்பிக்கையோடு செபித்தல் வாழ்வின் ஆதாரமாக அமைகிறது. மரியன்னை நமக்காய் பரிந்து பேசுகிறாள். மற்றவர்களை மன்னித்து மகிழ்விப்பதில் ஆர்வம் காட்டுவோம்" என்று குறிப்பிட்டார்.

திருப்பலி நிறைவில் அருட்தந்தை ம.றெக்ஸ் சவுந்தரா அடிகளாரின் தலைமையில் பாராட்டு நிகழ்வு நடைபெற்றது. ஆலய வளாகத்தில் அமைந்துள்ள சிறிய ஆலயம் 27.06.1954ல் ஸ்தாபிக்கப்பட்டது எனவும், புதிய ஆலயத்திற்கான அடிக்கல் 05.01.2005ல் அப்போது பங்குத் தந்தையாக இருந்த அருட்தந்தை பா.பி. இராஜசிங்கம் அவர்களின் காலத்தில் அருட்தந்தை றெஜி இராஜேஸ்வரன் அடிகளால் நாட்டப்பட்டது எனவும், வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. 10 வருட காலமாக கட்டுமானப் பணிகள் இடம்பெற்று இன்று அன்னைக்கோர் ஆலயம் அழகுற அமைந்துள்ளமையை யாவரும் பாராட்டினர்.

நிகழ்வின் போது ஆலயக் கட்டிட வேலைகளில் அர்ப்பணிப்போடு செயற்பட்ட பல தரப்பட்ட பணியாளர்கள் பொன்னாடை போர்த்தி பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். எமது பங்கின் சார்பாக அருட்தந்தை றெக்ஸ் சவுந்தரா அவர்களால் மேதகு ஆயர் அவர்களுக்கு நினைவுக் கேடயம் வழங்கப்பட்டது.

ஈற்றில் திருமதி. பற்றிமாமலர் அன்ரன் ஜோர்ஜ் விக்னராஜா அவர்களால் அனைவருக்கும் நன்றி நவிலப்பட்டது.

### 'உலகம் தோன்று...

வழங்கிய பதில்களும், அக்குழந்தைகள் வரைந்திருந்த ஓவியங்களும் இதில் அடங்கியுள்ளன.

குழந்தைகளை மனதில்வைத்து இந்நூல் எழுதப்பட்டிருந்தாலும், இங்கு கூறப்பட்டுள்ள கருத்துக்கள், பெரியோருக்கும் ஏற்றவையே என்று வெளியீட்டாளர் கூறியுள்ளார்.

## முதலாம் பக்க தொடர்ச்சி ...

### யாழ்.புனித பத்திரிசியார்

ஏறக்குறைய முந்நூறு மாணவர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றனர். புனித பத்திரிசியார் கல்லூரி மாணவர்கள் மட்டுமன்றி அயல் பாடசாலை மாணவர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். ஓய்வுநிலை பேராசிரியை திருமதி. மனோன்மணி சண்முகதாஸ் அவர்களும் மற்றும் குருக்கள், அருட்சகோதரிகள், ஆசிரியர்கள் தமிழ் ஆர்வலர்கள் எனப்பலரும் இந்நிகழ்வில் பங்குகொண்டனர்.

### இரக்கத்தின் ...

தலைவர்களின் மனச்சாட்சிக்கு அழைப்பு விடுப்பதாகவும் கூறினார்.

இந்தக் கருத்தரங்கு, உலகில் மரணதண்டனைகள் நிறுத்தப்படுவதற்கான முயற்சிகளை வலுப்படுத்தும் என்று தான் நம்புவதாகவும் கூறிய திருத்தந்தை, கொலை செய்யாதே என்ற கடவுளின் கட்டளை, அப்பாவிகள் மற்றும் குற்றவாளிகள் மீது அக்கறை காட்டத் தூண்டுகிறது, குற்றவாளிகளும், கடவுளின் கொடையாகிய வாழ்வைப் பெறுவதற்கு, முழு உரிமையையும் கொண்டுள்ளனர் என்றும் கூறினார்.

இந்த இரக்கத்தின் யூபிலி ஆண்டில், மரணதண்டனைகள் நிறைவேற்றப்படாமல் இருப்பதற்கு உழைக்குமாறு, கத்தோலிக்கருக்கும், நன்மனம் கொண்ட அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறேன் என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

### "இறைவனின்...

அளித்தார். அதாவது "உன் பெயர் பேதுரு, இந்தப்பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன் மேல் வெற்றி கொள்ளா...." (மத்:16.16-19) என்ற தமது உறுதியான வார்த்தைகளினூடாக திருச்சபைக்குரிய அதிகாரத்தை அளித்தார். இந்த வழிமரபில் வந்த எமது திருத் தந்தையும் காலத்தின் வெளிப் பாடாக அமைந்த இரக்கத்தின் யூபிலி ஆண்டை எமக்கு முழு அதிகாரத்துடன் அறிவித்து இறை இரக்கத்தின் பரிபூரண பலனை நாம் அடைய வேண்டும் என ஆசித்து நிற்கின்றார்.

திருச்சபை வரலாற்றில் வரும் யூபிலி ஆண்டு காலங்களில் தூய கதவினூடாக யாத்திரிகர்கள் வத்திக்கான் நோக்கிப் பயணம் செய்து பரிபூரண பலனைப் பெறுவது வழக்கமாக இருப்பினும் அதில் எத்தனை பேர் பங்கேற்கின்றனர்? எல்லா மக்களும் பரிபூரண பலன் அடைய சந்தர்ப்பம் கிடைக்குமா? இறை இரக்கத்தைப் பெறுவதில் எந்த இறைமக்களும் தவறவிடக்கூடாது என்ற தூர நோக்கில் சிந்தித்து எல்லா நாடுகளிலுமுள்ள அனைத்து மறைமாவட்டப் பேராலயங்களிலும், தூய கதவினை அமைத்து, அதனூடாக மக்கள் யாத்திரை செய்து ஒப்புரவு அருட்சாதனத்தில் முழுமையாகப் பங்கேற்று, திருப்பலி ஒப்புக் கொடுத்து, திருவிருந்தில் பங்கேற்று, அர்த்தமுடன் விசுவாச வாழ்வைப் புதுப்பிக்க வேண்டுமென அழைப்பு விடுத்தார். இதன் வழியாக நாமும் இறை இரக்கத்தின் கதவினூடாகப் பிரவேசித்து பரிபூரண பலனை அடைய வேண்டுமென்பதே திருத்தந்தையின் பேராவல்.

அத்துடன் பரிபூரண பலன் என்றால் என்ன என்பதை ஒவ்வொரு இறைமக்களும் ஆழமாக உணர வேண்டும். அதாவது எமது பாவங்களுக்காக மனம் வருந்தி மன்னிப்பு பெறுவது மட்டுமல்லாது எமது பாவங்களுக்கான தண்டனைகளிலிருந்தும் விடுதலை பெற்று இறைதந்தை அருளும் மீட்பைப் பெறுவதற்கு உரிமையுடையோராகின்றோம். இவற்றுக்காக நாம் யாத்திரை மேற்கொள்ளும் போது இறை மன்னிப்பையும் பாவங்களுக்கான தண்டனைகளிலிருந்து விடுதலையையும் பெறுவது எமக்கு மகத்தான கொடையாக அமைகின்றது என்பதை நாம் உய்த்துணர்ந்து இறைவனுக்கு நன்றி கூற வேண்டும். இறைவன் தன் ஒரே பேறான மகனை இரக்கத்தின் வெளிப்பாடாக இவ்வுலகிற்கு அனுப்பியதும் இதற்காகவே. எந்த மக்களும் பாவ அடிமைத்தனத்தினால் அழிவுறாமல் முடிவில்லா வாழ்விற்குரிய பரிபூரண பலனைப் பெறும் முழு உரிமையுடனும் சுதந்திரத்துடனும் வாழ்ந்து இறை தூய்மையில் பங்கேற்க வேண்டும்.

எம்மை அறியாதோர் மட்டிலும், ஏழ்மையில், எளிமையில், தேவையில் உழல்வோர் மட்டிலும் நாம் அன்பு செலுத்தி, இரக்கம்காட்டி, மன்னிப்பு அளித்து வாழ்ந்து, எமது பாவங்களுக்கான விடுதலையையும் பெற்று பரிபூரண பலன் பெற்றவர்களாக வேண்டுமென்பதே இந்நாளில் நாம் தூய கதவினூடாக பயணித்து மேற்கொண்ட திருயாத்திரையின் நோக்கமாகும். இத்துடன் மட்டுமல்லாது இன்று இங்கு வாரதவர்களையும் இவ் யூபிலி ஆண்டு நிறைவடைவதற்கு முன்பு அழைத்து வந்து நீங்கள் பெற்ற மகத்தான பலனில் அவர்களும் பங்கேற்கச் செய்வது உங்களது தலையாய பொறுப்பென்பதையும் உணர வேண்டும். இதற்கு ஏனையோர்க்கு உதவி புரிபவர்களாக நீங்கள் மாறுவதுடன் இறைவனின் மாபெரும் கொடையில் எல்லோரும் பங்கேற்க வழிகாட்டி